**செ.வெ.எண்: 52** **நாள்:23.09.2016**

## புதுக்கோட்டை மாவட்டத்தில் மழைக்காலங்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அரசு அலுவலர்கள் 1077 என்ற இலவச தொலைப்பேசி எண்ணில் தெரிவிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை 2016 புயல் வெள்ளக்காலங்களில் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 22.09.2016 அன்று நடைபெற்றது.

இந்த வடகிழக்கு பருவமழை தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:-

புதுக்கோட்டை மாவட்டத்தில் வரவிருக்கும் வடகிழக்கு பருவமழையின் பொழுது ஏற்படும் புயல், மழை, வெள்ளம் ஆகிய பாதிப்புகளிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் முழுநடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள அனைத்துத்துறைகளைச் சார்ந்த அலுவலர்களும் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. வடகிழக்கு பருவமழையின் போது அனைத்து பாதுகர்ப்பு ஏற்பாடுகளையும் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற அனைத்துத் துறைகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

இக்கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை ஏற்படும் காலங்களில் கடலோர காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்களை எப்பொழுதும் தயார் நிலையில் வைக்கவும், கடலுக்குச் செல்லும் மீனவர்களின் விபரங்களை மீன்வளத்துறையினரிடம் பெற்று, அத்துறையினருடன் இணைந்து தகுந்த முன்னேற்பாடு மேற்கொள்ள வேண்டும். தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினர் தங்கள் வசம் உள்ள மிதவைப் படகுகள், உயிர்காக்கும் சாதனங்கள், இதர மீட்பு உபகரணங்களை நல்லநிலையில் எப்பொழுதும் தயாராக வைத்திருக்க வேண்டும். மேலும், மாவட்டத்தின் அனைத்து தாலுகா தலைநகரங்கள் மற்றும் மக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் வெள்ள முன்னெச்சரிக்கை தொடர்பான ஒத்திகை பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும். பொதுப்பணித்துறையினர் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள புயல்பாதுகாப்பு மையங்கள், பொதுக்கட்டிடங்களில் உள்ள பழுதுகளை சீர்செய்து தயார்நிலையில் வைக்கவும், வெள்ளக்காலங்களில் பொதுமக்கள் தங்குவதற்கு பள்ளிகள், சமுதாயக்கூடங்கள், திருமண மண்டபங்கள் ஆகிய விபரங்களை தயார் செய்து, இவற்றிற்கு தேவையான மின்சார வசதி, குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதி ஏற்படுத்த வேண்டும்.

மேலும் வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் தங்களது பகுதிகளில் தேவையான அளவு மணல்மூட்டைகள், சாக்கு பைகளை இருப்பில் வைப்பதுடன் நீர்நிலைகளில் உடைப்பு ஏற்பட்டால் அதனை அடைக்க போதிய ஊழியர்களுடன் தயார்நிலையில் இருக்க வேண்டும். நகராட்சி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் தங்கள் கட்டுபாட்டில் உள்ள நீர் நிலைகள் மற்றும் சாலைகளை முறையாக கண்காணிக்க வேண்டும். மழை வெள்ளக்காலங்களில் பெறப்படும் வானிலை குறித்த அறிவிப்புகளை உடனுக்குடன் செய்தித்தாள்களில் பிரசுரம் செய்ய செய்தி-மக்கள் தொடர்புத்துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நெடுஞ்சாலைத்துறையினர் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் சாலைகளின் சேதங்களை சரி செய்ய தகுந்த இயந்திரங்களையும், சாலைகளில் விழும் மரங்கள் மற்றும் மின்கம்பங்களை அப்புறப்படுத்த தகுந்த பணியாளர்களையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மீன்வளத்துறையினர் இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தினால் தெரிவிக்கப்படும் வானிலை தொடர்பான முன்னெச்சரிக்கை தகவல்களை மீனவர்களுக்கு தெரிவிக்கவும், அவசரகாலங்களில் பயன்படுத்தும் வகையில் கட்டுமரம், படகுகள் மற்றும் நீந்துபவர்களை தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். மின்சாரத்துறையினர் மழைக்காலத்தில் பாதிக்கப்படும் மின்கம்பங்களை உடன் சரிசெய்து, மாற்று மின்கம்பங்களை தயார் நிலையில் வைத்து மின்வெட்டினை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டும். சுகாதாரத்துறையினர் தேவையான மருந்துகளை கையிருப்பில் வைத்திருப்பதுடன், அவசரகால ஊர்தியினை தயார்நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

..2..

கால்நடைபராமரிப்புத்துறையினர் கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகளை போதிய அளவு கையிருப்பு வைத்திருக்கவும், நுகர்பொருள் வாணிபக்கழகத்தினர் பொதுமக்களுக்கு தேவையான உணவுப்பொருட்கள், மண்ணெண்ணெய் போன்ற பொருட்களை தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். வேளாண்மைத்துறையினர் பயிர்சேதம் குறித்து உரிய தகவலை படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். வருவாய்த்துறையினர் தங்களது பகுதிகளில் முதல்நாள்பெய்த மழையின் அளவு, குடிசை வீடுகள் சேதம், கால்நடை இழப்பு, மனித உயிர்கள் இழப்பு, பயிர்கள் இழப்பு மற்றும் பேரிடர் குறித்த பிற தகவல்களை அனைத்து வட்டங்களிலும் உள்ள வட்டாட்சியர்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசியில் தினமும் தெரிவித்து அதன் தகவலை அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து மழைமாணிகளையும் தணிக்கை செய்து நல்லமுறையில் இயங்குவதை உறுதி செய்ய வேண்டும். நமது மாவட்டத்தில் உள்ள அனைத்துத்துறை அலுவலர்களும் தங்கள் பணிகளை சிறப்பாக செய்து வரவிருக்கும் வடகிழக்கு பருவமழையிலிருந்து பொதுமக்களை காக்க ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.சந்தோஷ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பொ) திரு.முருகண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**